

பாமாலை 195 A - நல் மேய்ப்பர் ஆடுகளுக்காய்

1 நல் மேய்ப்பர்
ஆடுகளுக்காய்

மரிக்க வந்து, சாவில்

கிடந்த நம்மைத் தயவாய்

நினைக்கும் அன்றிராவில்;

2 அன்புள்ள கையில்
அப்பத்தை

எடுத்து ஸ்தோத்தரித்து,

அதற்குப் பிறகே அதை

சீஷர்களுக்குப் பிட்டு:

3 "வாங்கிப் புசியுங்கள் , இது

உங்களுக்காய்ப் படைத்து

கொடுக்கப்பட்ட எனது

சரீரம் "என்றுரைத்து;

4 பிற்பாடு பாத்திரத்தையும்

எடுத்துத் தந்தன்பாக

உரைத்தது : "அனைவரும்

இதில் குடிப்பீராக"

5 இதாக்கினைக்குள்ளாகிய

அனைவர் ரட்சிப்புக்கும்

சிந்துண்டு போகும் என்னுட

இரத்தமாயிருக்கும்;

6 புது உடன்படிக்கைக்கு,

இதோ என் சொந்த ரத்தம்

இறைக்கப்பட்டுப் போகுது,

வேறே பலி அபத்தம் ;

7 இதுங்கள் அக்கிரமங்களை

குலைக்கிற ஏற்பாடே;

இதற்க்குச் சேர்ந்தென்
பட்சத்தை

நினையுங்கள் என்றாரே

8 ஆ, ஸ்வாமீ,
உமக்கென்றைக்கும்

துதி உண்டாவதாக;

இப்பந்தியால் அடியேனும்

பிழைத்துக் கொள்வேனாக.